ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

त्रिलोकीं संभोक्तुं विधृतदृढयत्नेन बलिना
गृहीतः कल्याख्यक्षुधितमृगराजेन भगवन् ।
बहिर्यातुं तस्मात् त्वदमलकृपानामकमहा-
किरातं मुक्त्वान्यं शरणमनुपश्यामि न मृड ॥ २३ ॥

𑌤𑍍𑌰𑌿𑌲𑍋𑌕𑍀𑌂 𑌸𑌂𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌵𑌿𑌧𑍃𑌤𑌦𑍃𑌢𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌬𑌲𑌿𑌨𑌾
𑌗𑍃𑌹𑍀𑌤𑌃 𑌕𑌲𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌕𑍍𑌷𑍁𑌧𑌿𑌤𑌮𑍃𑌗𑌰𑌾𑌜𑍇𑌨 𑌭𑌗𑌵𑌨𑍍 ।
𑌬𑌹𑌿𑌰𑍍𑌯𑌾𑌤𑍁𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌤𑍍𑌵𑌦𑌮𑌲𑌕𑍃𑌪𑌾𑌨𑌾𑌮𑌕𑌮𑌹𑌾
𑌕𑌿𑌰𑌾𑌤𑌂 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌮𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌨 𑌮𑍃𑌡 ॥ ௨௩ ॥

ஹே பகவந்! ஸகல சக்தியையும் பெற்று விளங்கும் ஹே சங்கர! மூவுலகங்களையும் புசிக்கவேண்டுமென்று மிகவும் அதிக முயற்சியுடையதும் மஹா பலவானாயும் விளங்கும் கலி என்று பெயர்பூண்ட பசியுடன்கூடிய சிங்கத்தால் கிரஹிக்கப்பட்டிருக்கிற நான் அதற்கு ஆகாரமாக ஆகாமல் வெளிவரவேண்டுமானால் உம்முடைய கிருபை என்கிற சிறந்த பலசாலியான வேடனைத் தவிர்த்து ஹே ம்ருட! ஸர்வலோகங்களுக்கும் ஸுகத்தையளிக்கும் ஹே கௌரீச! வேறொருவரையும் பாதுகார்க்கும் சக்தி பொருந்தியவராகக் கருதவில்லை.

எனது வர்ணாச்ரமங்களுக்குற்ற சாஸ்திரங்களில் கூறப்பட்ட தர்மங்களை சக்திக்கியன்றவரையில் அனுஷ்டித்து மறுமைப்பயனை யடைவதற்கு அற்பங்கூட இடங்கொடாமல் தடுத்துக் கெட்ட வழிகளிலேயே இழுத்துச்செல்லும் அற்பங்கூட தயவில்லாத பாபியான கலி என்கிற சிங்கத்தின் வாயிலகப்பட்டுக்கொண்டு வெளிவரமுடியாமல் பாபகர்மங்களைச்செய்துகொண்டு ஜன்மாவையும் வீண்பண்ணுகிறோம். ஹே பசுபதே! உமது கருணை என்னும் கிராதனால் அக்கொடிய சிங்கத்தைக்கொன்று எங்களைப் பாதுகார்க்கவேண்டும் என்று ஒரு பெரியார் பிரார்த்திக்கின்றார்.

சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
விபவ-ஹூ கார்த்திகை-மீ கசஉ

# வேதாந்த ஸார ஸங்கிரஹம்.

(514-வது பக்கத்தொடர்ச்சி)

திதிக்ஷா முன்ஜன்மாக்களில் நம்மால் செய்யப்பட்ட பாப புண்யகர்மங்களையனுஸரித்து இந்த ஜன்மாவில் ஏற்படும் சீதோஷ்ணம், ஸுகதுக்கம் முதலானவைகளை ஸஹிப்பது திதிக்ஷையாகும். பரமாத்மஸ்வரூபஞானத்தையடைவதற்கு முக்கிய ஸாதனமான சிரவணமனனநிதிவிஷயங்களில் எப்பொழுதும் மனது பிரியத்துடனிருப்பதே ஸமாதானமெனப்படும்.

குருபதேசம்— ஆத்மதத்வத்தைப் போதிக்கும் சாஸ்திரங்கள் இவைகளிலேற்படும் விச்வாஸத்திற்கு சிரத்தை என்றுபெயர். இவைகளே ஸமாதிஷ்டகம்.

முமுக்ஷை— தன் வீட்டில் பார்யை, புத்திரன், தனம், பசு முதலிய ஸகல வைபவங்களுடனும் ஸுகமாயிருக்கும் ஒரு கிரஹஸ்தன் அந்த வீட்டில் நான்கு பக்கங்களிலும அக்கினியால் பீடிக்கப்பட்டால் அவ்வீட்டின் மத்தியிலிருந்து தீயால் தகிக்கப்படும். அந்த புருஷன் எவ்விதம் தனக்கு மிகவும் பிரியங்களான பத்நி, புதல்வன், பொருள் முதலிய யாவையும் சற்றும் கவனியாமல் விட்டுவிட்டுத் தனக்கு அக்னிபாதை ஏற்படாமலிருக்க வேண்டி விரைவில் வெளியிற்சென்று தனது தாபத்தைப்போக்க வேண்டுமென்று முயற்சிப்பனோ அவ்விதம் ஸம்ஸாரத்தால் ஏற்படும் தாபத்தைப் போக்கவேண்டி மற்றுமுள்ள வஸ்துக்களில் இருக்கும் அபிமானத்தை அடியோடு தள்ளிவிட்டு பரமாத்மஸ்வரூப ஸாக்ஷாத்காரரூபமான மோக்ஷத்தில் தீவ்ரமாயேற்படும் இச்சைக்கு முமுக்ஷை என்று பெயர். இங்கு கூறப்பட்ட நான்கு ஸாதனங்களும் அவச்யம் வேண்டியதுதானு என்று நிகழும்

சங்கைக்கு மறுமொழி கூறுகின்றார். முதலாவது ஸாதனமாய்க் கூறப்பட்ட நித்யாநித்ய வஸ்துவிவேகமே போதுமென்று சொல்லவியலாது, நித்யாநித்யவஸ்துவிவேகம், ஒருவனுக்கிருந்தாலும் இரண்டாவது ஸாதனமாய்க் கூறப்பட்ட வைராக்கியமில்லாவிடில் விஷயஸுகானுபவத்திலேயே இச்சையிருக்குமாகையால் முதல் ஸாதனமான விவேகமிருந்தும் உபயோகமில்லை, ஆகையால் இரண்டாவது ஸாதனமும் வேண்டும். இவ்விரண்டு ஸாதனங்களுமிருந்தாலும் சில மஹரிஷிகளுக்குக்கோபதாபங்கள் அதிகமிருந்ததாகத் தெரிகிறபடியால் அவர்களுக்கு இவ்விரண்டு ஸாதனங்களிருந்துமுபயோகமில்லை. ஆகையால் மூன்றுவதான ஸமாதிஷட்கம் சொல்லப்பட்டிருக்கின்றது. இம்மூன்று ஸாதனங்களுமிருந்தாலும் சிலர் தீவிரமான இச்சையில்லாமல் பகவானையுபாஸித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களும் முக்கியாதிகாரிகளாகமாட்டார்கள். ஆகையால் மோக்ஷத்தைப் பெறவேண்டுமென்கிற அதிக தீவ்ரமான இச்சையும் இருக்கவேண்டும். இவ்விதம் நான்குஸாதனங்களுடனும் கூடியவரே உத்தமாதிகாரி. அவர்தான் மோக்ஷத்தைப் பெறத்தகுந்தவர் என்று அறிவிக்க வேண்டியே நான்கு ஸாதனங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்விதம் நான்கு ஸாதனங்களையும் பெற்ற சிறந்த அதிகாரி ஸத்குருக்களின் தர்சனத்திற்காகவேண்டிய ஸமித் முதலானவைகளை உபகாரமாகத் தன் கைகளிலேந்திக்கொண்டு ஸத்குருக்களிருக்குமிடம் தேடி அவர் அருகிற்சென்று அடிபணிந்து மிகவும் பக்திசிரத்தையுடன் வணக்கமாக நின்றுகொண்டு ஹே ஸ்வாமிந்! ஹே பகவந்! ஸத்குரோ என்று மரியாதையான வசனங்களால் அவர்களை அழைத்து, ஜீவன் என்றால் யார்? ஈச்வரன் என்பவர் யார்? இந்த ஜகத்தானது எவ்வித நிலமையுள்ளது? இம்மூன்றும் எங்கிருந்து வந்தது? எங்கு போகப்போகின்றது என்று வினவ வேண்டும்? இந்த அபிப்பிராயத்தையே பிராமணன் வைராக்யத்தையடைந்து பரமாத்மஸ்வரூபத்தை அறியவேண்டியதற்காக ஸமித்பாணியாக இருந்துகொண்டு ஸகல வேதார்த்தங்களையும் நன்கறிந்தவராயும் ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவராயுமிருக்கும் ஸத்குருவையடையவேண்டுமென்று முண்டகோபநிடதம் உபதேசிக்கின்றது. கீதாசாஸ்திரத்திலும்

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः ॥

தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா ।
உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்சிந: ।

ஹே அர்ஜுனா! நீ தத்வஸ்வரூபத்தையறிந்த மஹான்களிடம் சென்று நமஸ்கரித்து பணிவிடைசெய்து பக்திசிரத்தையுடன் உனக்கிருக்கும் ஸந்தேஹத்தை வினவினால் உண்மையையறிந்த அம்மஹான்கள் உனக்கு ஞானோபதேசம் செய்வார்கள். அந்த ஞானத்தை நீ அறி என்று பகவான் உபதேசிக்கிறார்.

இவ்விதம் சிஷ்யனால் பிரார்த்திக்கப்பட்ட ஸத்குருவும் கருணையுடன் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற இம்மூன்று குணங்களால் ஜீவ ஈச்வர ஜகத்துக்களுடன் வந்தப்பிரகாரத்தை அறிவித்து ஆன்மஸ்வரூபத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நன்கு விளக்கிக் காட்டுகிறார். இந்த அதிகாரிக்குமுன் பல ஜன்மங்களில் செய்யப்பட்டபுண்யங்களால் ஸாதன சதுஷ்டயஸம்பத்து எற்படுகின்றது. அவ்வித புண்யகர்மாவில்லாவிடில் ஸாதனங்கள் எற்படமாட்டா. ஸம்ஸாரபந்தத்தைப் போக்கக்கூடிய இவ்வித தத்வஞ்ஞானத்தை உபதேசிப்பதற்கு ஸ்ரீ குரு, ஸ்ரீ பரமேச்வரன் இவர்களையே சிறந்தவர்களாகக் கொள்ளவேண்டும். இந்தப் பிரகாரம் எவன் ஸத்குரு உபதேசத்தால் நன்கு விசாரித்து ஜீவன் ஆன்மா இவர்களுடைய பேதத்தையறிகின்றானோ அவன்தான் நித்யாநந்தஸ்வரூபமாய் விளங்கும் முக்தியைப் பெறுவதற்கு அருகனாகிறான். சுபம்.

[இரண்டாவது வர்ணகம் முடிவுபெற்றது.]

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

---

# இளமையில் விவாஹம் இன்பம்.

(524-வது பக்கத்தொடர்ச்சி.)

13. பதிவ்ரதாதர்மத்தையடைய ஏற்பட்ட தியாகங்கள்:— பர்த்தா இறந்துவிட்டால் பதிவ்ரதாதர்மத்தைக் காப்பாற்றி ஸ்திரீ

கள் பிராணனையும், சரீரத்தையும் அக்னியில் தியாகம் செய்திருக்கின்றார்கள். (அதாவது உடன்கட்டை ஏறுகிறது) பிறகு வைராக்கியம் குறைய சென்ற 500-வருஷங்களாக பர்த்தாவை இழந்த ஸ்திரீகள் தங்களது அலங்காரம், ரூபம், போகம், விசேஷ ஆகாரம் இவைகளையாவது பதிவ்ரதத்தைக் காப்பாற்றக் கணவனுக்கு தியாகம் செய்துவருகிறார்கள் இப்பொழுதோ பதியினிடம் இருக்கப்பட்ட அன்பானது பர்த்தாவை இழந்த ஸ்திரீகள் தலைமயிரைக்கூட விட்டுக்கொடுக்க இஷ்டப்படுகிறதில்லை. தவிர, பதி இறந்துவிட்டால் என்ன? போகத்தைத்தான் எதற்காக விட்டுக்கொடுக்கவேண்டும்? வேறு ஒரு புருஷனைக் கல்யாணம் செய்துகொண்டு அனுபவித்தால் என்ன? என்கிற உணர்ச்சியும் சில ஸ்திரீகளுக்கு உண்டாயிருக்கின்றன. அந்தோ! இது என்ன? கலிகாலத்தின் மஹிமையா? இந்த ஸ்திதியில் ஸ்திரீகளுக்குள்ள தியாகபுத்திதான் எங்கே ஓடிற்று? தேவர் தாசிகளை சரீரத்தைப்பலபேர்களுக்குக் கொடுத்தாலும்கூட தேவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட மனதை ஸத்யநெறியினின்றும் தவறாமல் இருப்பதால் முக்தியை அடைவதுடன் பேரின்பத்தையும் அடைகிறார்களே? அவர்களைப் பழிக்கவா? ஸத்யநெறியில்லை, பதிவ்ருதாதர்மம் இல்லை, கேவலம் போகந்தான் அடையவேண்டிய லாபம். அது ஆடு, மாடு மிருகங்களிடத்திலும் காணப்படவில்லையா? ஆங்கிலேயப் படிப்பிலிருந்து உண்டான புத்தி இதுதானா? நமது தேசத்தில் பதிவ்ரதாதர்மத்தை விரும்பும் கன்னிகைகள் இல்லையா? பதிவ்ரதாதர்மத்துடன் கூடின குலஸ்திரீகள் நமது தேசத்தில் இல்லை என்கிற எண்ணமா? இவர்களை பாதிக்கக்கூடிய விதவாவிவாஹமும், விவாஹவயதுநிர்ணயமசோதாவும், பதிவ்ரதா அக்னிபகவானுடைய ஆகாரத்திற்காகவா கொண்டுவரப்பட்டிருக்கிறது. பரமேச்வரனுடைய மூன்றாவது கண்ணுக்கு இரையான மன்மதன் நடித்ததுபோல் விதவாவிவாஹமும், விவாஹவயதுநிர்ணயமசோதாவும் நர்த்தனம் செய்கின்றனது. இதை ஆட்டிவைக்கவா மெம்பர் பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆகையால் ஜீவகோடிகள் அறியாமையால் உண்டாகும் துக்கத்தை விலக்கி நித்தியமான ஸ்வரூபஆனந்தத்தில் பிரகாசிக்க அனாதிகாலம்தொட்டுக் கடவுளால் உண்டுபண்ணப்பட்ட வேதத்

தில் உரைத்த தர்மங்களை ஜீவகாருண்யமுள்ள நமது பரமாசாரியார் முதலான மஹரிஷிகளால் அனுக்ரஹித்து ஜீவகோடிகளின் க்ஷேமத்துக்காக விவாஹம் முதலான பல தர்மங்களை ஜீவர்களின் சக்திக்கிசைந்தார்ப்போல் சீக்கிரத்தில் கர்மபந்தங்களில் நின்றும் ஸ்வதந்திரத்தை அடைந்து நித்யானந்தமுள்ளவர்களாக இருக்க ஆர்யதர்மங்களை எடுத்துரைத்து நம்மையும், நம்ம முன்னோர்களையும் வெகு நேர்த்தியான வழியில் பழக்கியிருக்கும்பொழுது நமது குலதர்மமான விவாஹம் முதலான தர்மங்களை விட்டுவிலக எந்த மூடர்களும் ஆஸ்திக ஸ்திரீகளும், புருஷர்களும் இஷ்டப்படமாட்டார்களென்றும், பரமஹம்ஸ பரிவிராஜகாசாரிய ஸ்ரீமத் லோககுரு ஸ்ரீ சங்கராசாரியாள் அனுக்கிரஹத்தால் ஆர்யதர்மங்களை இழக்கமாட்டீர்களென்றும், நமக்கு க்ஷேமங்கள் உண்டாகுமென்றும் நம்புகிறேன்.

டி. ஏ. ராமசுப்பிரமணியய்யர்.
தத்தனூர்.

---

## ஸ்ரீ காசி பிராம்மண மஹா ஸம்மேளனம்.

இம் மஹா ஸம்மேளனம் ஸ்ரீ காசியில் நவம்பர் 6, 7, 8-ம் தேதிகளில் கூடியது. இதன் பூர்வாங்கமாக விசாரஸபை என்று 28—10—28முதல் 4—11—28வரை நடந்தது. இம்மஹா ஸம்மேளனம் நடக்கப்போகிறதென்று சுமார் 2-மாதங்களுக்கு முன்னமேயே நம் பத்திரிகாநேயர்களறிந்திருக்கலாம். இதனிமித்தம் ஒவ்வொரு ஜில்லாக்களிலிருந்தும் பிரதிநிதிகள் ஏராளமாய் வரவேண்டுமென்று ஸபை காரியதரிசியால் பத்திரிகைமூலம் தெரிவித்துக்கொள்ளப்பட்டபடி பற்பல தேசங்களிலிருந்தும் பல பல பண்டிதர்கள் கூடினர். இதற்கென்று காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்யமூர்த்திகளால் ஸ்ரீமடத்தின் பிரதிநிதியாய் 12 பெயர்கள் ஆக்ஞை கொடுத்து அனுக்கிரஹிக்கப்பட்டார்கள். அம்மஹாபாக்கியத்தில் ஒன்றுமறியாத என்பேரிலும் கருணைப் பிரவாஹம் சாய்ந்தது.

कीटोऽपि सुमनस्सङ्गादारोहति सतां शिरः ।

கீடோ௨பி ஸுமநஸ்ஸங்காதாரோஹதி ஸதாம் ஶிர: ।

என்ற நியாயப்படி பரமபாக்யம் பெற்றேன்; நிற்க, இம்மஹா ஸம்மேளனம் நடத்தவிடப் அவிமுக்தமென்றும், விஸ்வேஸ்வர ராஜதானி என்றும், மோக்ஷநகரீ என்றும், வாராணஸீ என்றும் திருநாமம் பூண்ட இப்பட்டணத்தைப்பற்றியும், ஸ்ரீ கங்கையைப் பற்றியும் சுருதி, ஸ்மிருதி, இதிகாஸம், அஷ்டாதசபுராணங்கள், உபபுராணங்களும் ஸ்பஷ்டமாய்ப் போதிக்கின்றன. வெகுகால மாய் அஷ்டாதசவித்தைகளுக்குப் பீடபூமி என்றும், சோக தாபங்களோடு கூடியவனையும், வர்ணாச்ரமாசாரங்களை அடியோடு ஒழித்தவனையும் முக்தனாகச் செய்யும் மஹாஸ்தலமென்பதை எவ்வளவு கூறினும் போதாதென்பது திண்ணம். அதிகம் கூறுவானேன்?

वाराणसीपुरीवासवासना वासितात्मना ।
किं शुना समतामेति वराकः पाकशासनः ॥

வாராணஸீபுரீவாஸவாஸநா வாஸிதாத்மநா ।
கிம் ஶுநா ஸமதாமேதி வராக: பாகஶாஸந: ॥

காசீவாஸத்தால் ஸம்ஸ்காரம் ஏறின நாயோடு அல்பனான இந்திரனும் ஸமானமாகமாட்டான் என்று சொல்வதே போதும். ஏதோ ஸபையின் மஹிமையை விவரிக்க எழுந்த என்னை க்ஷேத்திர மஹிமை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு தன்னிடமிழுக்கிறது இருக்கட்டும். வாராணஸீயைப் பிரார்த்தித்து விடைபெற்றுக்கொண்டு இனி ஸபையைப்பற்றிக் கூறுகிறேன். நான் 31—10—28-ல் காலை வந்ததும் விசாரஸபைக்குப் போனேன். அங்கு அழகாய் அமைக்கப்பெற்றிருந்த விசாலமான கொட்டகையில் உன்னத ஸ்தானத்தில் அமைக்கப்பெற்றிருந்த திவ்ய ஆஸனங்களில் சிஷ்ய வர்க்கங்களுடனும் அழகாய் அணியப்பட்டிருந்த கண்களைக் கவரக்கூடிய உடுப்புக்களுடனும், பட்டாளங்களுடனும், ஸ்ரீ வல்லப மதாசார்யர்கள் நால்வர் திவ்யமான விலையுயர்ந்த குடைகளுடன் வீற்றிருந்தனர். அவர்களையடுத்து அவ்விதமே தோதாத்ரிராமானுஜ மடாதிபதிகள் ஒருபுறம் சங்கேச்வர மடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியாரவர்களும் அவர்கள் பக்கம் த்வாரகா மடாதீச சங்கராசார்யரவர்களும் ஸமஸ்த பிருதுகுடைகளுடனும் உச்சாஸனத்தை அலங்கரித்தனர். இவர்கள் தர்மாசார்யர்கள்

என்று காரணப்பெயரை அடைந்து பிரகாசித்துக்கொண்டிருந் தனர். ஒருபுறம் நான்காவது ஆச்ரமத்தை ஸ்வீகரித்த தூவிகள் தண்டகமண்டலுகளுடன் 100 பெயர்களுக்குக் குறையாமல் தர்மாசார்யர்களின் ஆஸனத்திற்குச்சற்றுத்தணிந்த மேடைகளில் விஜயம் செய்திருந்தனர். கேவலம் தூவிகளாய் காஷாயமாத்திர முள்ள ஸந்யாஸிகள் நூற்றுக்கணக்காய் மற்றோர்புறம் அமர்ந் திருந்தனர்.

இனி ஸபைக்கு வந்த பண்டிதர்களின் ஸங்கியைப்பற்றிக் கூறவேண்டும். மகாமகோபாத்தியாய பிருது பெற்றவர்கள் சுமார் 50 அப்பட்டம்பெருத பண்டித ரத்தினங்கள் 1500. இக் கணக்கு அதிசயோக்தி அல்ல. இன்னின்ன தேசத்திலிருந்து இத்துணைபெயர்கள் வந்தார்களென்றும் அவர்களது பெயரும் விலாஸமும் பூர்ணமாய் அச்சிடப்பட்டு ஸமீபத்தில் ஓர் புத்தகம் ஸபையோரால வெளிப்படுத்தப்போகிறபடியால் அதை இங்கு விரிக்கிற்பெருகுமென்றுபட்டிலும விடுகிறேன். ஆயினும் சில ஊர்களின் பெயரைமட்டும் வரைகிறேன். கல்கத்தா, ஐக்கிய மாகாணம், மேதனீபுரம், பீஹார், ஒரிஸாமாகாணம், மைமென் ஸிங், காமரூபம், டக்கா, மத்தியமாகாணம், குல்னு,பங்கூரா, பாத் வான்,நோவாகாலி,ஷில்ஹெட்,மூர்ஸிடாபாத்,24 பர்க்கானுஸ்,டினு ஜ்பூர், ராஜ்ஷாஹி, சிட்டாகாங், திரிபுரா, ஜஸ்ஸேலி, நவத்வீபம், ராங்கவபுரம், பாபனு, விக்ரமபுரம், ஜம்ஷட்பூர்,ஸான்டல்பர்க்கானு, பம்பாய், புனு, நாஸிக், போக்ரா, தார்வாடா, பர்காம், ஹூக்ளி, ப்ரம்மாவதீ, ஷஹரான்பூர், ஜயப்பூர், சர்ரூர், லாகூர், குஜராத், பாரி ஸல், வீரபூமி,ஸாப்ரா, பாதபூர்,ரீவா, நெல்லூர்,குண்டூர், கிருஷ்ணு, கோதாவரி, மதிராஸ், திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, மலையாளம் என்று இம்மட்டும் குறிப்பு புஸ்தகத்தில் கண்டேன். இன்னும் பல தேசங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. எனக்கு அவை விளங்கவில்லையென்று எழுதவில்லை. இவ்விதம் கூடிய பண்டிதர்கள் ஆயிரக்கணக்கைப்பார்த்ததும் என் மனதிற்கேற் பட்ட குதுகலத்திற்கு எல்லையில்லை. ஆயினும் அவர்கள் தோற் றத்தில் பண்டிதர்களென்று கூறமுடியாதாயினும் வாக்கை திறந் தவுடன் ஆச்சரியப்படத்தக்கதாய்தானிருந்தது. அவ்வத்தேசத் துப்பண்டிதர்கள் அந்தந்த தேசத்தின் பிரதிநிதிகளென்றே

பாவிக்கப்பட்டனர். யாவரும் ஸபையில் ஸம்ஸ்கிருதத்தில் தான் வ்யவகாரம் செய்யவேண்டுமென்ற நியமம் நியதமாய் இருந்தது. இதற்காகவரும் பண்டிதர்களுக்கும் மற்ற தேசாந்திரத்தார்களுக்கும் ஸகாயம் செய்ய ஏற்படுத்தப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான வாலண்டியர்கள் அவர்களது அடையாளங்களுடன் ரயில்வே ஸ்டேஷனில் வந்து எப்போதும் காத்திருந்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்தனர். ஒவ்வொரு வாலண்டியரான பையனும் ஸம்ஸ்கிருதத்தில் கூடிய பட்டும் வ்யவகரிக்க சக்தியுள்ளவனும் நாம் சொல்லும் ஸம்ஸ்கிருத வாக்கை அவர்கள் அறிந்துகொண்டு உசிதத்தை நடத்துவதில் சிரத்தை கொண்டிருந்தனர். விசாரஸபைக்குப்பிரவேசிப்பவர் யாவருக்கும் டிக்கட்டுகள் கொடுக்கப்பட்டு அவர்களே உள்ளே அனுப்பப்பட்டனர். இம்மகோத்ஸவத்தைப் பார்க்க ஆவல்கொண்ட மற்றவர்கட்கும் ஏராளமாய் டிக்கட்டு வாங்கப்பட்டன. ஒவ்வொரு விசாரங்களின் மத்தியில் அபிப்பிராயபேதத்தால் ஜனகோலாகலம் ஏற்பட்டால் அதை அடக்குவதற்கும் ஶாந்தி ஶாந்தி ஶாந்தி என்றே கூறினர். இவ்விதம் 8 தினங்கள் நடந்த விசாரஸபையில் ஆலோசனைக்கு வந்த விஷயங்கள் 17ம் இப்பத்திரிகையில் முன்னமேயே பிரசுரிக்கப்பட்டிருப்பினும் அதுஸம்ஸ்கிருதத்திலேயே போடப்பட்டிருந்தாலும் நாட்சென்றுவிட்டபடியாலும் இங்கு மீண்டும் தமிழில் வரைகின்றேன்.

1. ஸ்திரீகளுக்கோ புருஷர்களுக்கோ விவாஹத்தின்காலம் எதுமுதல் எதுவரை சாஸ்திரஸம்மதமானது?

2. அதில் காலத்தின் கதியை உத்தேசித்து சாஸ்திரவிரோதமில்லாமலும்எதுவரையில் கட்டுப்படுத்துவது யோக்கியமானது.

3. ப்ரௌடையானதின்பிறகு விவாஹம் செய்வது முக்கிய பக்ஷத்தில் சேர்ந்ததா? அல்லது மத்தியமமா? அல்லது ஆபத்து விஷயமா?

4. ருதுவானபிறகு அந்த கன்னிகை விருஷளீ என்று கூறுவதின் கருத்தென்ன?

5. பிராமணஜாதிக்குள் உள்வகுப்புகளுக்குள் ஒருவருக்கொருவர் விவாஹம் செய்துகொள்வது சாஸ்திரஸம்மதமா?

6. தர்மக்ஞர்களுள் எவர்களாவது ஏதாவது தர்மத்தை மாற்றலாமா? அதாவது இருக்கிற தர்மத்தைச் சுருக்கலாமா? புதிதாய் ஒன்றை ஏற்படுத்தலாமா?

7. விதவாவிவாஹம் செய்வதும், தம்பதிகள் விவாஹத்தை ரத்துசெய்துகொள்வதும், சாஸ்திரஸம்மதமா? அல்லது விரோதமில்லையா? அல்லது நிந்திக்கத்தக்கதுதானா?

8. தீண்டாதவர்களைத் தீண்டக்கூடாதென்பது ஜாதியை ஒட்டியா? கன்மத்தை ஒட்டியா?

9. மிலேச்சர்களையும் சண்டாளர்களையும் தொடும் விஷயத்திலோ ஸபையில் பிரவேசிக்க விடும் விஷயத்திலோ கிணற்றில் சேர்ந்து ஜலமெடுக்கும் விஷயத்திலோ, தேவாலயங்களில் பிரவேசிக்கச்செய்யும் விஷயத்திலோ, மற்றவர்களைக் காட்டிலும் எவ்வளவு தாரதம்யம் ஏற்படுத்தலாம்?

10. பாகவத தர்மத்தால் தீக்ஷைகொடுப்பது ஜாதியில் ஏற்றத்தை அடையச்செய்யுமா?

11. யவனர் முதலிய ஜாதி கன்மத்தாலேற்பட்டதா? அல்லது ஜன்மத்தாலேயா?

12. பாகவத தர்மத்தால் தீக்ஷை கொடுப்பதில் ஜாதிவிசேஷம் தடங்கல் செய்யுமா?

13. தேவலஸ்மிருதியை சூலபாணி முதலியவர்களின் வியவஸ்தைப்படி பிராமாண்யமாய் ஒப்புக்கொள்ளலாமா? இல்லையா?

14. மிலேச்சர்களோடு ஸம்ஸர்க்கம் செய்தவனுக்கு எவ்வளவு காலபரியந்தம் பிராயச்சித்தம் செய்யலாம்?

15. ஒருவருடபரியந்தம் அல்லது அதற்குக் கொஞ்சம் அதிககாலம் மிலேச்சஸம்ஸர்க்கம் செய்தவர்களுக்கு பிராயச்சித்தம் செய்வது, கோஷ்டியில் சேர்த்துக்கொள்வது என்ற விஷயத்தில் பிராயச்சித்தத்தில் வித்தியாஸம் உண்டா இல்லையா?

16. விராத்திய ஸம்ஸ்காரம் என்பது எத்தனை பரம்பரை வரையில் சாஸ்திரஸம்மதம்?

17. ஜாதி என்பது இப்போது செய்யும் கன்மத்தாலேற்பட்டு மாற்றக்கூடியதா? அல்லது பிறப்பாலேயே ஏற்பட்டு மாற்றக்கூடாததா?

இக்கேள்விகளை பற்றித்தான் விசாரஸபையில் விவாதம்நடந்தது. இவைகளைப்பற்றி சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்து 171

பண்டிதர்கள் முன்னமே தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகை மூலம் தெரிவித்திருக்கின்றனர். அவைகளை ஸபையோர் அச்சிட்டு புத்தகரூபமாய் வெளியிட்டிருக்கின்றனர். அவைகளின் ஸாரம் நமக்குத்தெரியவேண்டியதவசியமாயினும் பின்னால் சௌகர்யப் படி தெரிவிக்கிறேன். இவ்விதம் ஒவ்வொரு கேழ்வியைப்பற்றி விசாரிக்குமுன் 5 மகாபண்டிதர்களை அக்கேழ்விகளின் நிர்ணயத் தின் பொருட்டும் மத்தியஸ்தர்களால் நியமித்துத்தான் ஆரம்பிக் கிறது. அவர்களது நியமனமும் தர்மாசார்யர்களின் ஆக்ஞை யின்பேரில்தான். ஒவ்வொரு தினத்திற்கும் அக்கிராஸனர் ஒரு பண்டிதர் ஏற்படுவார் இவரது வரம்பை ஒட்டித்தான் இதரர்கள் பேசவேண்டும். விவாதிக்கப்படும் விஷயத்தில் எல்லோருடைய ஸம்மதமும் ஏற்பட்டுவிட்டதாவென்பதைத் தெரிந்துகொண்டு தான் அடுத்த விஷயம் ஆரம்பிக்கும் வழக்கம். விஷயத்தில் கக்ஷி பேதம் ஏற்பட்டுவிட்டால் அதை மத்தியஸ்தர்களிடத்தில் ஒப்பு வித்துவிடுவது ஸம்பிரதாயம். அவ்விதம் 1, 13. 14, 15-வது பிரச் னங்களில் கக்ஷிபேதம் ஏற்பட்டு அவைகளுக்கு மத்தியஸ்தர்க ளால் செய்யப்பட்ட நிர்ணயம்தனியாய் அச்சிடப்பட்டிருக்கிறது. அதை அடுத்த ஸமயத்தில் வெளியிடுகிறேன். பிறகு தர்மாசார்யர் களின் ஒரு மனதான அபிப்பிராயமும் அச்சிடப்பட்டிருக்கிறது. இவ்விதம் மிகவும் வைபவத்துடன் விசாரஸபை நடந்தது.

பிறகு 6, 7, 8 தேதிகளில் ஸம்மேளனம் நடப்பதற்காக சுமார் 2000 ஜனம் அடங்கக்கூடிய கொட்டகை போதாதென்று 10000 ஜனம் அடங்கும்படி லக்ஷ்மீகட்டத்தில் அமைக்கப்பட்டி ருந்த அழகிய கொட்டகையில் மகாஸபை 6ம் தேதி துவக்கப்பட் டது. கணக்கிட முடியாத கூட்டம் கூடிற்று. இம்மகாஸபையில் அக்கிராஸனம் வகிக்க ஏற்றுக்கொண்டிருந்த தர்ப்பங்காமகாராஜா அவர்கள் தனக்கேற்பட்டிருந்த அழகிய ஆஸனத்தில் நாற்புற மும் சாமரம் குடைகள் சூழஸமஸ்தஜனங்களின் ஜய கோஷத் துடன் அமர்ந்தனர். இம்மகாராஜாவை ஊர்வலமாய் அழைப்ப தற்கும் வேதசாஸ்திரங்களை விசாரஸபையிலிருந்து மகாஸபைக்கு அழைப்பதற்குமாய் முதல் நாள் நடந்த ஊர்வலம் விமரிசையை 1000 கண்படைத்த இந்திரன் தான் பூரணமாய் பார்த்திருப்பான். ஆதிசேஷனே அதன் வைபவத்தை வர்ணித்திருக்கலாம். முத லில் பிராசீன தோரணையாய் அழகிய அலங்காரம் செய்யப்பெற்ற

12 யானைகள் மலைகள்போல அசைந்துகொண்டு சென்றன. காசி ராஜாவின் அரண்மனை பாண்டுவாத்தியங்கள் பல ஸெட்டுகளாய்ச் சென்றன. பஜனைகோஷ்டிகள் பல வாத்தியகோஷங்கள் பல பல தினுஸுகளிற் பல வேதகோஷம், பண்டிதகோஷ்டி ஒவ்வொரு ஆசார்யர்களும் தங்கள் தங்கள் துருப்பு குதிரைகளுடனும் பல்லக்குகளில் அலங்காரத்துடனும் வாத்தியகோஷங்களுடனும் சென்றனர். ஜனக்கூட்டம் 1-மைல் நீளம் தெருவில் எள்ளுவிழ இடமில்லாமலிருந்தது. தெருக்களின் இருவரிசைகளிலும் மெத்தை, மேன்மெத்தைகளில் கூடியிருந்த ஸ்திரீஜனங்களும் மற்றவர்களும் இருகைகளிலும் புஷ்பங்களை அள்ளியள்ளிப் பூமாரி பொழிந்ததை நிமிர்ந்துபார்த்தால் அப்ஸரஸ்திரீகள் ஆகாயத்தினின்றும் பொழிகின்றனரென்றே நினைக்கும்படி இருந்தது. இடைவிடாமல் பிராமணமஹாஸம்மேளனகே ஜே, தர்ப்பங்கமஹாராஜா கீ ஜே, வல்லபாசார்ய கீ ஜே, ராமாநுஜாசார்ய கீ ஜே, த்வாரகாசங்கராசார்ய கீ ஜே, ஸங்கேச்வரசங்கராசார்ய கீ ஜே, என்ற சப்தம் தேவலோகத்தில் இந்திராதிகளையும் ஆனந்தக்கடலில் அமிழ்த்தியிருக்குமென்பதில் ஐயமில்லை. எவ்வளவுதான் இதைப் பற்றிக் கூறமுடியும்? இனி பிரகிருதத்தைத் தொடர்வாம்.

இவ்விதம் மகாஸபையில் அக்கிராஸனர் ஆஸனத்திலமர்ந்ததும் காசிமகாராஜாவின் ஸ்வாகத பத்திரிகை அவரது ஸபாபண்டிதரால் படிக்கப்பட்டது. அது கம்பீரமாய் இருந்தது. அதன் கருத்தையும் அடுத்து வெளியிடுவாம். அதன்பிறகு அக்கிராஸனரின் உபன்னியாஸம் அவரது பண்டிதரால் படிக்கப்பட்டது. அது ஸ்வல்பமாய் ஸம்ஸ்கிருதமும் முழுபாகம் ஹிந்தியிலும் எழுதப்பட்டிருந்தது. அதன் சுவை நம்மால் அறியமுடியாவிடினும் ஸபையோர்களின் ஓயாத புகழால் அதுவும் ரஸமுள்ளதாய் இருந்திருக்கும். பிறகு ஆசாரியர்களின் அனுமதியைப் பெற்று பிர்மஸ்ரீ மகாமகோபாத்தியாய லக்ஷ்மணசாஸ்திரிகளால் ஸபை ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஏராளமான ஜனங்கள் உத்ஸாகத்தோடு வந்திருப்பதால் இம்மகாஸபையில் தேசபாஷையான ஹிந்திபாஷையாலேயே பேசவேண்டுமென்றும் பிரார்த்தித்துக் கொள்ளப்பட்டதை யாவரும் அங்கீகரித்தனர். (தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரியள்